Registered as a Newspaper in Ceylon ★ ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 4

மலர் 9
போன் : 389

National Tamil Daily

இதழ் 34
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 2 ஜுல்ஹஜ் 4 வியாழக்கிழமை [illegible] 3-71

# சிறுபான்மைத் தமிழருக்கு செனட்டர் பதவி

## சுகாதார அமைச்சர் தகவல்

யாழ்ப்பாணம், வியா.

''இலங்கையில் வாழும் சகல மக்களினதும் நலன் கருதியே தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது. இன, மத, மொழி பாரபட்சமின்றி நாம் தொண்டாற்றவே இந்த அரசாங்கத்தின் அமைச்சர் பதவியை ஏற்றுள்ளோம். சிறுபான்மைத் தமிழ்மக்களின் கஷ்டங்களையும் அவர்களுக்குள்ள பெரும் தொல்லைகளையும் உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரம் என்னிடம் தெரிவித்துள்ளார். அதனை நிவர்த்தி செய்யுமுகமாக சிறுபான்மைத்தமிழ்மக்களின் சார்பில் ஒருவருக்கு செனட்டர் பதவியை அளிக்க அமைச்சில் ஆலோசனை செய்துவருகின்றேம். சிறுபான்மைத் தமிழ் மக்களில் ஒருவருக்கு செனட்டர் பதவியை அவசியம் கொடுக்க வேண்டுமென நான் பிரதமரிடம் தெரிவித்து நிச்சயமாக அதனை நிறைவேற்றித் தருவேன் என நான் உறுதி கூறுகின்றேன்.''

மேற்கண்டவாறு கரணவாய் வடக்கில் நேற்றுமுன்

[6-ம்பக்கம்பார்க்க]

### உத்தியோக மொழி இலாகா

# தமிழ்மொழிச்சட்ட விதிகளின் அமுலுக்கு ஓர் அதிகாரி

## தமிழ் உதவி ஆணையாளர் நியமிக்க சம்மதம்

### தமிழரசுக்கட்சிக் கோரிக்கை நிறைவேறுகிறது

கொழும்பு, புதன்

தமிழ்மொழிச்சட்டவிதிகளை அமுல் நடத்தவும் தமிழில் மொழி பெயர்க்கப்படும் வேலைகள் சரியாக நடைபெறவும் உத்தியோகமொழி இலாகாவில் தமிழ் உதவி ஆணையாளர் ஒருவர் நியமிக்கப்படவேண்டுமென்ற தமிழரசுக்கட்சியின் நீண்டகாலக் கோரிக்கை நிறைவேறியிருக்கிறது.

உத்தியோக மொழிஇலாகாவின் உதவி ஆணையாளராக ஒரு தமிழரைநியமிப்பதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. விரைவில் ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவார். திரு.மயில்வாகனம் என்பவர் இப்பதவிக்கு நியமிக்கப்படக்கூடுமெனக் கூறப்படுகிறது.

உத்தியோகமொழியிலாகாவில் தமிழ்உதவிஆணையாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென்றுகல்முனையில் சென்றவருடம் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் ஆண்டு மகாநாட்டிலும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் பெயரை தமிழில் 'ஸ்ரீ லங்கா மகா வங்கி' என்று வழங்கப்படுவதை 'இலங்கை மத்திய வங்கி' என சரியான தமிழில் மொழிபெயர்க்க வேண்டுமென கிளிநொச்சி எம். பி. திரு.கா.பொ.இரத்தினமும் மற்றையோரும் கிளர்ச்சி செய்துவந்தனர். இதன்பெயரில் 'ஸ்ரீ' என்பதை நீக்கிவிடவும் அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறதாம்.

## ஞானசீக தேரோவின் ஒப்புதல் வாக்குமூலம்

### வாபஸ் பெறும் மனுவை சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது

கொழும்பு, புதன்

சதிவழக்கில் முதல் எதிரியான ஞானசீகதேரோ தாம் பொலிசாருக்கு முதலில் கொடுத்திருந்த ஒப்புதல் வாக்கு மூலத்தை வாபஸ் பெறுவதற்காக செய்து கொண்ட அப்பீல் மனுவை இன்று சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது.

இந்த வாக்கு மூலத்தை வாபஸ் பெறுவதற்கான ஒரு மனுவை சதிவழக்கு முதல் எதிரியான ஞானசீக தேரோ கொழும்பு பிரதம நீதிபதி யு. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் முன்னர் தாக்கல் செய்திருந்தார். அது நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து அவர் சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனுவைத் தாக்கல் செய்தார்.

இன்று பிரதம நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோவும் நீதியரசர் எஸ். சிவசுப்பிரமணியமும் விசாரித்தார்கள். எதிரிகள் தரப்பில் டாக்டர் கொல்வின் ஆர்.டி. சில்வா ஆஜராகி வாதித்தார்.

நீதியரசர்கள் பிரதம மாஜிஸ்டிரேட்டின் தீர்ப்பு சரியென்று குறிப்பிட்டதுடன், ஒப்புதல் வாக்குமூலம் வழக்கில் சாட்சியமாகப் பயன்படுத்தப் படவேண்டும் என்றும் தீர்ப்பு அளித்தார்கள்.

## தமிழ்நாடு சட்டசபை அங்கத்தவர்கள் பதவியேற்பு

சென்னை, மார்ச் 15

தமிழ்நாடு கீழ்சட்டசபையின் முதலாவது கூட்டம் இன்று தற்காலிகமாகசபாநாயகர் திரு.மூக்கையாதேவர் தலைமையில் நடைபெற்றது.

இன்று காலை பத்து மணியளவில் ஆரம்பமாகிய சட்டசபைக் கூட்டத்தில் முதலில் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். அவர் சத்தியப்பிரமாணம் செய்கையில் இந்திய நாட்டின் ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற உழைப்பதாகஉறுதி தெரிவித்தார். பின்னர் மற்ற அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர் அதன்பின்ன மற்றக் கட்சித் தலைவர்கள் ஆங்கில 'அகர'முறை வரிசைப்படி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

முதல் அமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அவர் லோகசபை அங்கத்தராகத் தெரிவு செய்யப்பட்டதாலேயே கீழ்சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கீழ் சட்டசபையின் தற்காலிக சபாநாயகர் திரு. மூக்கையாதேவர் பேசுகையில் தம்மை அப்பதவிக்குத் தெரிவுசெய்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்

இம்மாதம் 17ந்தேதி சபாநாயகர், உப சபாநாயகர் தெரிவு நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

## உயர்ந்த சேவா மனப்பான்மை தேவை

### பாரத மக்களுக்கு இந்திராவின் செய்தி

புதுடில்லி, மார்ச் 15

நாட்டின் சகல மக்களிடமிருந்தும் எந்த சமயத்திலும் எவ்வித சந்தர்ப்பங்களிலும் உயர்ந்த சேவா மனப்பான்மையை நான் எதிர்பார்க்கின்றேன். அதே மனப்பான்மையுடன் நானும் எனது சகாக்களும் கடமை புரிவோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா இன்று பாரத மக்களுக்கு விடுத்த ஒரு செய்தியில் கூறினார்.

நாட்டில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தல்களின் முடிவுகளிடமிருந்து ஜனநாயகத்தில் இந்தியா முன்னேறி வருவது தெளிவாகத் தெரிகின்றது என்றும் எதிர்காலத்தைக் குறித்து நல்ல அறிகுறிகள் தெரிவதாகவும் பிரதமர் இந்திரா காந்தி கூறினார்.

ராஜ்ய முதன் மந்திரிகளுக்கு மத்திய அரசாங்கம் ஒத்துழைப்பு அளிக்குமென்றும் அதுபோலவே ராஜ்ய அரசாங்கங்களிடமிருந்து மத்திய அரசாங்கம் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

நாட்டின் உணவு பிரச்சினை மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கப் போகிறது என்று குறிப்பிட்ட திருமதி காந்தி உற்பத்தியைப் பெருக்குவதுதான் இதற்குள்ள ஒரே மாற்றம் என்றார். மாணவர் ஆர்ப்பாட்டங்கள் பற்றிக் குறிப்பிடுகையில் இது ஒரு எச்சரிக்கை என்றும், கல்வி முறையில் திருத்தங்கள் தேவை என்பதை இது காட்டுகிறது என்றும் கூறியதுடன், நாட்டின் பொறுப்புகள் புதிய ஒரு தலைமுறைக்கு மாறிவருவதாகவும் தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத்தில் சிங்கள நாடகம்

### நாளைமேடையேறுகிறது

யாழ்ப்பாணம், வியாழன்

73 நாடகங்களில் சிறந்த தெனத் தேர்ந்தெடுத்துச் சென்றவருட சிங்கள நாடக விழாவில் சிறந்த நடிகர், நடிகைத் தேர்வில் பரிசுபெற்ற சிங்கள நாடகமான 'வெஸ் முகுனு' நாளை மாலை யாழ்ப்பாண நகரமண்டபத்தில் மேடையேற்றப்படுகிறது. அரசாங்க அதிபர் திரு. வேர்னன் அபயசேகரா தலைமை வகிக்கிறார்.

## கட்டாய ஓய்வு லீவாகி சம்பளம் கிடைத்தது

கொழும்பு, புதன்

உத்தியோகமொழியில் தேர்ச்சி பெறவில்லை என்பதற்காக கட்டாய ஓய்வில் அனுப்பப்பட்ட அரசாங்க ஊழியர் ஒருவர் சில மாதங்களின் பின் கட்டாய சேவைக்கு அழைக்கப்பட்டார். அவர் வேலையில்லாதிருந்த நாட்கள் இப்பொழுது கட்டாய லீவு நாட்களாகக் கணிக்கப்பட்டு அதற்குரிய சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மன்னார்க் கச்சேரியைச் சேர்ந்த க. கந்தசாமி என்பவருக்கு அந்தக் கட்டாய லீவு சம்பளம் எழுதுவினைஞர்சங்கத்தினதும் வட்டுக்கோட்டை எம். பி.யினதும் முயற்சியினால் நேற்றுமுன்தினம் அதாவது இரண்டரை வருடங்களின் பின் கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நெருப்புச் சுடுவதை அறிந்தும் அதைமடியில் வைத்துக் கட்டிக்கொள்வார் உண்டோ! உலகியல் நிலையாதது. துணைக்கு வராது என்று அறிந்தும் அதனைத் துணைக் கொள்வது அதைப் போலத்தான்.

— வாகீசர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna,
Telephone: 383.

யாழ்ப்பாணம் பராபவ வரு பங்குனி மீ 2உ (16-3-67)

## வெளிநாட்டு உதவி

ஆசிய நாடுகளின் முன்னேற்றம் அந்த நாடுகளின் முயற்சியிலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் பிறநாடுகளின் உதவியை நம்பியிருப்பதில் பயனில்லையென்றும் கைத்தொழில் கடற்றொழில் அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தன சண்டி மாநகர சபை ஆசிய பத்திரிகையாளர்களுக்கு அளித்த இரவு விருந்துபசாரத்தில் பிரதமரின் சார்பில் பேசுகையில் குறிப்பிட்டிருப்பது, ஆசிய நாடுகளினதுமட்டுமல்ல 'ஆபத்பாந்தவர்கள்' எனக்கருதிக்கொள்ளும் அரசுகளதும், வெளிநாட்டுஉதவியையே நம்பியிருக்கும் நாடுகளினதும் சிந்தனையைத் தூண்டுவதாக இருக்கவேண்டும்.

இலங்கை உட்பட ஆசியநாடுகள் பலவும் வெளிநாட்டு உதவிகளைக் கணிசமானஅளவு பெற்றுள்ளன; இன்றும் பெற்றுவருகின்றன. ஆசியாவில் இஸ்ரேல், ஜப்பான் ஆகிய இருநாடுகளையும் தவிர இதர நாடுகள் அனைத்தும் இன்னும் அபிவிருத்தி அடையாத நாடுகளாகவே இருக்கின்றன. இஸ்ரேலும் ஜப்பானும் கூட வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுத்தான் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. வெளிநாட்டு உதவியைமட்டும் அவை நம்பியிராமல் தங்கள் உழைப்பிலும் முயற்சியிலும் நம்பிக்கை கொண்டிருப்பதுதான் இதற்குக்காரணம். உதவியளிக்கும் எந்த நாடும் தனது நலனைப்பேணுமல் உதவியளிக்க மாட்டாது; அப்படி எதிர்பார்க்கவும் முடியாது. ஆனல் உதவி அளிப்பதாகக்கூறி உரிய சமயத்தில் அந்த உதவிகளைத் திடீரென்று நிறுத்திக்கொள்வது, உதவியே அளிக்காமல் விடுவதைவிட நன்மையானது.

இலங்கையின் பொருளாதார நிலை கஷ்டமாக இருப்பதை உணர்ந்தும் அதைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்கின்ற பெரிய நாடுகள் எங்கள் உற்பத்திப் பொருள்களுக்கு அதிக விலை கொடுக்காமல் குறைந்த விலையே கொடுக்கின்றன என்று அமைச்சர் பிலிப் கூறியிருப்பதுடன் இந்த உதவியளிக்கும் நாடுகள் நம்மை பிச்சை எடுக்கும் நிலைக்கு வைத்துவிடுகின்றன என்று தெரிவிக்கிறார். இது உண்மைதான். தேயிலை, ரப்பர் போன்ற விளைபொருள்களே எமது பிரதான ஏற்றுமதிப் பொருள்களாகும். இவைகளில்தான் நமது வருமானம் பெரிதும் தங்கியிருக்கிறது. இந்த நிலையை நாம் மாற்றிக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். பொருளாதார நெருக்கடியிலிருந்து நாம் விடுதலை பெற நமது மூலவளங்களை நாம் நன்குபயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்றும் கூறும் அமைச்சர் இங்கு வெளிநாட்டு நிபுணர்கள் வந்துவந்துபோகிறார்களேயன்றி அபிவிருத்தியில் எந்தவித பயனும் காணப்படவில்லை என்றும் கூறுகிறார்.

நமக்கு தங்கள்செல்வத்தைத்தந்து உதவியளிக்காவிட்டாலும் எங்கள் கஷ்டநிலையைத் தமக்குச் சாதகமாக்கி 'தவிச்சமுயல்' அடிக்காமலிருந்தலே வெளிநாடுகள் நமக்குச் செய்யும் பேருதவியாக இருக்கும். ஆனல் நமது மூலவளங்களை நாம் பயன்படுத்தி நாட்டை முன்னேற்றுவதற்கு வெளிநாடுகள் தடை செய்வதாகச் சொல்ல முடியாது. வெளிநாட்டு நிபுணர்கள்வந்துபோகிறார்களேயன்றி எதுவும் உருவாகவில்லை என்று அவர்கள்மீது 'பழி' போடுவதும்சரியாகாது. நமக்குக் கிடைத்த உதவிகளையும் வெளிநாட்டு நிபுணர்கள் கூறிய ஆலோசனைகளையும் சரியாகத் திட்டமிட்டு ஒருமுகப்படுத்தி, இன, மத, பிரதேச குரோதங்களுக்கும் அரசியல்வேறுபாடுகளுக்கும் இடமளிக்காமல் செயல்படுத்தியிருந்தால், நாம் இஸ்ரேலையும், ஜப்பானையும் போல் இல்லாவிட்டாலும் இன்றுபோல் 'பிச்சை' எடுக்கும் மோசமானநிலை எமக்கு ஏற்படாமலாவது இருந்திருக்கும்.

---

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் சுமார் ஓராண்டு காலமாக திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் தொடர்பாக நிகழ்த்தி வந்த திருவிளையாடற் புராண கதாகாலட்சேப பூர்த்திவிழா இன்றுமாலை தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறுகிறது.

# அழுது அடியடைந்த அன்பர்

அழுது அடியடைந்த அன்பர் யார் என்றொரு கேள்வி பலருடைய உள்ளத்தில் எழலாம். திருவிளையாடற் புராணத்தைப் படித்த அன்பர்கள் அறிந்திருக்கலாம். ''அழுதால் உன்னைப் பெறலாமே'' என்று உலகுக்குக் கூறிய மணிவாசகப் பெருமானையே பரஞ்சோதி முனிவர், அழுது அடியடைந்த அன்பர் என்று கூறுகின்றார்.

எழுதரு மறைகேட்டு
விறைவனை யெல்லிற்
கங்குற்
பொழுதறு காலத்தென்றும்
பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமேலேறத்
துளும்புகண் ணீருண்
மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப
னடியவர்க் கடிமை
செய்வாம்.

என்பது பரஞ்சோதி முனிவருடைய வாக்கு.

தமக்கு விரும்பியதைப் பெற்றுக் கொள்வதற்கு அழுகையை ஒரு சுலபமான சாதனமாகக் கொண்டுள்ளனர் மக்கள். குழந்தைகளிடத்திலும் பெண்களிடத்திலும் இத்தன்மை மிகுதியும் காணப்படுகின்றது. ஆண்டவன் அருளை விரும்புவோரும் இம்முறையையே பின்பற்றினர். திருஞானசம்பந்தக் குழந்தை, 'அம்மையே அப்பா' என்று அழுதே, 'தோடுடையசெவியனும், விடைஏறியவரும் தூவெண்மதி சூடியவரும், காடுடைய சுடலைப் பொடி பூசியவரும் ஆகிய சிவபிரானது காட்சியைக் கண்டதோடு ஞானப்பாலையும் உண்டது.

சிவன் அமர்ந்து உறையும் நல்லூர்த் திருப்பெருமணத்தை 'நங்கள் வாழ்வு' எனவரும் திருஞானசம்பந்தர் நண்ணினர். நம்பியாண்டார்நம்பி திருமகளைப் பெருமணம் புரிய இசைந்தார். மண்ணவரும் விண்ணவரும் பண்ணவரும் யாவரும் திருமணம் காணவந்தனர். மணமக்களைக் கண் இமையாமல்வாழ்த்தியதால் மனிதரும் தேவராகத் திகழ்ந்தனர். தவநெறி வளர்க்கவந்த பிள்ளையார்க்கு 'என்னை முன்னாள் ஆண்டஅப்பண்புடைமலர்ப் பாதம் காட்டும்' என்னும் நல்லுணர்வு நண்ணிற்று. திருமணத்தைக்கண்டோர்க்கும் தீதுறுபிறவிப் பாசம் தீர்த்தல் செம்பொருளாகக் கொண்டார். கொண்டு, நாதனே! நல்லூர்ப் பெருமண நம்பனே! உன்பாத மெய்ந்நிழல் சேரும் பருவம் ஈது என்று காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க ஓதினார். எல்லார்க்கும் முத்தி கிடைத்தது. திருவருட்காட்சியும் திருவருட்பேறும் சம்பந்தப்பெருமானுக்கு அழுகையாலேயே கிடைத்தன.

இராமலிங்க வள்ளலார் ஓர் இடத்திலே உலக மக்களைப் பார்த்துமரணமிலாப் பெருவாழ்வுக்கு அழைக்கின்றார். அதற்கு வழியும் கூறுகின்றார்.

'அன்பே நிறைந்து நிறைந்து ஊற்றெழுங் கண்ணீரதனல், உடம்பு நனைந்து நனைந்து அருளமுதே நன்னிதியே, ஞான நடத்தரசே என்னுரிமை நாயகனே என்று, வனைந்து வனைந்து ஏத்தும்'' என்கிறார்.

மணிவாசகப் பெருமான் பல இடங்களில் இத்தன்மையைப் புலப்படுத்துகின்றார்.

''மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்துன் விரையார் கழற்கு,என், கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி.''

அழுகைக்கு ஆண்டவனே உளம் கனிந்து காட்சி கொடுக்கின்றான் என்றால் அவ்வாயுதத்தை நாம் ஏன் பயன்படுத்தக்கூடாது. பயன் இல்லாத விடயங்களுக்கு உபயோகிக்குங் கண்ணீரைப் பயன் உள்ள ஆண்டவனிடம் சொரிந்தால் அவனருள் நம்மை எப்போதுமே விட்டு நீங்காமல் இருக்கும் அல்லவா? உள்ளத்தோடுபட அழாவிட்டாலும் பொய்யுக்காவது அழுவோம். ஆண்டவன் கருணை காட்டுவான். உள்ளம் உருகிக் கண்ணீர் வராவிட்டாலும் கண்களிலிருந்தாவது வரட்டும். என்றோ ஒருநாள் அது உள்ளத்தையும் தொட்டே தீரும்.

நெஞ்சக்கனகல்லும் நெகிழ்ந்து நெகிழ்ந்துருகுவோமாக. அழுதடி அடைந்த அன்பராம் மணிவாசகரின் வாழ்வு எமக்கு முன்னோடியாக அமைவதாக.

— நா. முத்தையா

## தருமை ஆதீனசுவாமிகள் ஆசியுரை

திருவிளையாடற் புராண தொடர் கதாப்பிரசங்க பூர்த்தி விழாவை யொட்டி தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அனுப்பியுள்ள ஆசிச் செய்தி இது.

மக்களுக்குப் பக்தி நெறியைப் புகட்டுவன புராணங்கள். புராணங்கள் பலவற்றில் மூன்று புராணங்கள் மிகச் சிறந்தவையாகச் சொல்லப்படும். அவை பெரிய புராணம், திருவிளையாடற்புராணம். கந்தபுராணம் என்பவை. இம்மூன்றும் சிவபெருமானுடைய மூன்று கண்கள் போன்றவை என்பது மரபு. இவைகளை முறையாகக் கேட்டுணர்ந்தவர்கள் சைவ சமயத்தின் உண்மைச் சிறப்புக்கள் பலவற்றை உணர்ந்து, சிவபெருமானிடத்தும், சிவனடியாரிடத்தும்அளவிலாப் பக்தியை அடைந்து திருவருள்பெற்று உய்வார்கள்,

இவைகளில் திருவிளையாடற்புராணம், சிவபெருமான் தன் அடியவர் பலருக்காகப் பலசமயங்களில் மிகவும் எளிமையாய்த் தோன்றி அருள்புரிந்த அருள் விளையாடல்களைக் கூறுவது. இவ்விளையாடல்களில், விறகுவிற்றது. மண் சுமந்தது, பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது போன்ற சில திருவிளையாடல்கள் சிவபெருமானது எளிவந்த தன்மையை மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டுவன. இத்தகைய அருள் நிகழ்ச்சிகள் பலவற்றை மக்களிடையே அறிஞர்கள் பலர்எடுத்துரைத்தல் வேண்டும்.

புராண பிரசங்கங்கள் இன்னிசையோடு கூடியிருப்பின் மக்களைப் பெரிதும் கவர்ந்து பக்தி வெள்ளத்தில் ஆழ்த்தும். இத்தகைய இன்னிசைச் சொற்பொழிவாளராக யாழ்ப்பாணத்தில் விளங்கும் திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் அவர்கள், யாழ்ப்பாணம் வண்ணைநகர் ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவிலில் ஏறக்குறைய ஓர் ஆண்டு காலமாகத் திருவிளையாடற் புராணத்தை தொடர் கதாப்பிரசங்கமாகச் செய்துவருவது பயன்தரத்தக்கது.

தொடர் கதாப்பிரசங்கம் திருவிளையாடலை முற்ற முடித்து. பூர்த்திவிழா இனிது நடைபெறவும், பிரசங்கியாரும், பிரசங்கத்தின் ஆதரவாளர்களும், பிரசங்கத்திலும், பூர்த்திவிழாவிலும் பங்குகொண்டு கேட்டு மகிழும் அன்பர்கள் பலரும் நலம் பல பெற்று நீடுவாழவும், எங்கள் செந்தமிழ்ச் சொக்கன் திருவருள் முன்னிற்பதாக.

### உற்சவம்

யாழ்ப்பாணம், வியா.

நல்லூர் நாயன்மார்க்கட்டு ஸ்ரீ வெயிலுகந்த விநாயகராலய அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்களுக்கு நடைபெறும்.

ஃ

யாழ்ப்பாணம், வியா.

பன்னலை திருவீச்சரம் வள்ளிமலைக் கந்தசாமி கோவில் ஆலய உற்சவம் இம்மாதம் 25-ம் திகதி ஆரம்பமாகிறது. தொடர்ந்து 15 தினங்களுக்கு உற்சவம் நடைபெறும்.

## ஐயாறன் எழுதுகிறது

ஒரு நல்ல காரியத்துக்கு யாழ்ப்பாணக்கலைஞர்களும், வர்த்தகர்களும், பொதுமக்களும் எவ்வளவுதூரம் ஒத்துழைத்து உதவத்தயாராக வுள்ளனரென்பதைக் காட்டுவதற்கு ஓர் அத்தாட்சி போல, நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில்நடைபெற்ற செல்வி திரிபுரசுந்தரி குமாரசாமியின் அழகான பரதநாட்டியக்கச்சேரி பல விதங்களிலும் வெற்றிகரமாக அமைந்தது.

யாழ்ப்பாண ரோட்டரி சங்கத்தார் இங்கு நோயாளர் உடல் தேற்றிக்கொள்ளும் ஆஸ்பத்திரியைக் கட்டுவதற்கான உதவி நிதிக் கச்சேரி அது. புகழ் பெற்றநட்டுவாங்க வல்லுநரான வழுவூர் ராமையாபிள்ளையின் ஈழத்து முதல் சிஷ்யை செல்விதிருக்குமாரசாமியின் பரதநாட்டியக் கச்சேரியில் பலபுதிய அம்சங்கள் மிளர்ந்து இக்கலை எப்படி வரவர வளர்ந்து வருகின்றதென்பதைக் காட்டியது. ஸ்ரீ தியாகராஜரின் பஞ்சரத்ன கீர்த்தனைகளில் ஒன்ருன 'சாதிஞ்சனே' என்பதற்கு ஆடிய பரதமும், 'பெற்றதாயைமக மறந்தாலும்' என்ற விருத்தத்துக்கான அபிநயமும் என்மனதைச் சிறப்பாகக் கவர்ந்தன. ஆரம்பமுதல் கடைசிவரை, தெய்வீக புனிதச்சூழ்நிலையை இக்கச்சேரியில் உணர்ந்தேன். பின்னணி இசை மிகமேலாக அமைந்தது.

'மற்ற நாடுகளிலே கலை என்பது வெறும் பொழுது போக்குக்குத்தான். ஆனல் பாரத நாட்டிலும் இலங்கையிலும், அருங்கலைகள் புராதன காலம் முதல், மக்கள் மனதைத் தூய்மைப்படுத்தி அவர்களைத் தெய்வீக வழியில் திருப்பும் நோக்கத்துடனே கோவில்கள் மூலம் வளர்க்கப்பட்டுள்ளன' என்று வழுவூரார் கூறி, செல்வி திருவின் கலைக்குடும்பத்தையும், யாழ்ப்பாணமக்களின் கலை ரஸனையையும் பாராட்டி நன்றிதெரிவித்தார்.

தலைமைவகித்த அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா, யாழ்ப்பாணம் ரோட்டரி சங்கம் செய்துவரும் சமூகசேவைகளைப் பாராட்டி, அது கட்ட இருக்கும் புதிய ஆஸ்பத்திரிக்கு கரையூரில் நல்ல இடம்ஒதுக்கி உதவலாமென்று நம்பி இருப்பதாக கரகோஷங்களுக்கிடையேசொல்லி, கலைச்செல்விதிரு, கலைக்கேதம்மை அர்ப்பணித்துள்ளதாகப் புகழ்ந்தார்.

இப்பரதநாட்டியக் கச்சேரிமூலம் புதிய ஆஸ்பத்திரியின் அடிமட்டம்வரை அநேகமாகக் கட்டிவிடலாமென்று ஓர்அன்பர்மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். நமது அருங்கலைசள், ஆஸ்பத்திரி முதலியவைகளைக் கட்ட எப்படி உதவுகின்றன!

இதே கச்சேரி கொழும்பிலே பல்கலைக்கழகத்தில் புதிய இந்திய ஹைகமிஷனர் கண்டேவியாவின் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

ஃ ஃ ஃ

தேடுவன் தேடுவன் செம்
மலர்ப் பாதங்கள் நாள்
தொறும்,
நாடுவன் நாடுவன் நாபிக்கு
மேலே யோர் நால்விரல்,
மாடுவன்மாடுவன்வன்கை
பிடித்து மகிழ்ந்துளே,
ஆடுவன் ஆடுவன் ஆமாத்
தூர்எம் மடிகளே.

—சுந்தரமூர்த்தி
சுவாமிகள்

[திருவாமாத்தூரில் எழுந்தருளியுள்ள எம் தலைவனது

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்ய-யு.எஸ். பிரதிநிதிகளை யுதாண்ட் சந்தித்தார்

## வியட்னும் சமாதானமுயற்சி

நியுயோர்க், மார்ச் 15

**ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. யுதாண்ட், அமெரிக்கப் பிரதிநிதி திரு. கோல்ட் பேர்க்கை நேற்றுச் சந்தித்து நீண்டநேரம் பேசினர். வியட்னும் பற்றியே இவர்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். தமது ஆசிய விஜயத்திலிருந்து அமெரிக்கா திரும்பிய பின், திரு. கோல்ட்பேர்க்குடன் திரு. யுதாண்ட் நடத்தும் இரண்டாவது பேச்சுவார்த்தை இதுவாகும்.**

வியட்னுமில் புதிய சமாதான நடவடிக்கைகள் பற்றி இருவரும் நீண்டநேரம் பேசினர் ஆனல் இவர்களது சந்திப்பு முடிவடைந்து வெளியில் வந்த திரு. கோல்ட்பேர்க், பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கமறுத்துவிட்டார். அது வியட்னுமில் சமாதானம் காண்பதற்குச் சாதகமாகாது என அவர்களிடம் குறிப்பிட்டார்.

திரு. கோல்ட்பேர்கைச் சந்தித்தபின், திரு. யுதாண்ட் சோவியத் பிரதான பிரதிநிதி திரு. பட்கார்னேவைச் சந்தித்துப் பேசினர்.

### வடவியட்னும் குற்றச்சாட்டு

இதற்கிடையில், அமெரிக்கா, மக்கள் குடியிருப்புப் பகுதிகள்மீது குண்டு, ராக்கெட் வீச்சுகளினல், வியட்னும் போரை விஸ்தரித்து வருவதாக வடவியட்னும் குற்றஞ்சாட்டியுள்ளது அண்மையில் அமெரிக்க விமானங்கள் நடாத்திய குண்டு வீச்சில், பெருந்தொகையான மக்கள் இறந்ததாக வடவியட்னும் பத்திரிகையான 'நான் தாம்' கூறியுள்ளது.

### தென்வியட்னுமில்

நேற்று தென்வியட்னுமிலுள்ள பெரிய அமெரிக்க விமானத்தளமொன்றின்மீது, வியட்காங்கியர் கடுமையாகத் தாக்கினர். அமெரிக்க எண்ணை சேகரிப்பு நிலையமொன்று வெகுவாகப் பாதிக்கப்பட்டதுடன், ஓர் அமெரிக்க விமானந் தாங்கியும் சேதப்படுத்தப்பட்டது.

தென் வியட்னும் காட்டுப் பகுதிகளில் அமெரிக்கத் துருப்புக்கள், வியட்காங்கியரின் பெரியளவு தாக்குதல் ஒன்றை எதிர்நோக்கவேண்டியிருந்தது. இரு தரப்பினருக்குமிடையே கடும் போர் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

### கம்போடியா

கம்போடிய எல்லைகளைப் பலப்படுத்துவதெனக் கம்போடியா தீர்மானித்துள்ளதாகக் கம்போடிய இளவரசர் நொரோடம் தெரிவித்துள்ளார். கம்போடிய பாதுகாப்பை அமெரிக்கா ஊடுருவத் திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தே தாம் இந்த நடவடிக்கையை மேற்கொள்வதாக இளவரசர் நொரோடம் தெரிவித்தார்.

வடவியட்னும் மீது விமானத் தாக்குதல் நடாத்த உதவும் விமானத் தளங்களைத் தாய்லாந்தில் அனுமதித்துள்ளதாக அண்மையில் தாய்லாந்து அரசாங்கம் அறிவித்திருந்தது தெரிந்ததே.

## தடுப்புக்காவல் கைதிகள் விடுதலை

### மேற்கு வங்காள அரசாங்கம முடிவு

கல்கத்தா, மார்ச் 15

தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளவர்கள் எல்லோரையும் விடுதலை செய்வதென மேற்குவங்காள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. விசேஷ அம்சங்கள் உள்ள வழக்குகளைத்தவிர்த்து, மற்ற எல்லா வழக்குகளிலும் சம்பந்தப்பட்டவர்கள் விடுதலையாக்கப்படுவர். விசேஷ அம்ச வழக்குகள் பின்னர் ஆராயப்படும்.

ராஜ்யத்தில் நல்லெண்ணத்தையும், நல்லுறவையும் வளர்க்கவும், மாமூல் நிலைமையை மீண்டும் நிறுவவுமே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக மேற்கு வங்காள அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவிடம்

## ஸ்டாலின் மகள் புகலிடம கோரினர்

வாஷிங்டன், மார்ச் 15

தற்போது சுவிட்சர்லாந்தில் தங்கியுள்ள முன்னள் ரஷ்யத்தலைவர் ஜோசெப் ஸ்டாலினின் 42 வயது மகள் ஸ்வெட்லானு அமெரிக்காவில் புகலிடம் கோரியது உண்மையேஎன அமெரிக்க ராஜாங்க இலாகா நேற்று இங்கு அறிவித்தது. ஆனல் இதுபற்றி எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லையென அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். வேறு பல நாடுகளிலும் புகலிடம் கேட்டு ஸ்வெட்லானு விண்ணப்பித்ததைத் தெரிவித்த அப்பேச்சாளர், அந்நாடுகளின் பெயர்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

## எதிர்க்கட்சிதலைவர்களை இந்திரா சந்திக்கிருர்

புதுடில்லி, மார்ச் 15

இந்தியப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இன்று எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்திக்கிருர். தேர்தலை அடுத்துத் தோன்றியுள்ள புதிய நிலைமையில், அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகளுக்குமிடையேயுள்ள உறவுகள் நடைமுறை சாத்தியமான அடிப்படையில் அமைய என்ன நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென்பதை இக்கூட்டம் ஆராயும். அரசாங்கம் அமைதியான முறையில் இயங்க உதவும் முறையிலேயே இச்சந்திப்பு நிகழ்கிறது.

# நிபந்தனைகள் இன்றி பாகிஸ்தானுடன் பேச்சு

## இந்தியா தயார்

### என்கிருர் சக்ளா

புதுடில்லி, மார்ச் 15

முன்நிபந்தனைகள் எதுவுமின்றி, எந்த விஷயத்தைப் பற்றியும் எந்த இடத்திலும் சரி, இந்தியா, பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவிருப்பதாக இந்திய வெளியுறவு மந்திரி திரு. சக்ளா அறிவித்துள்ளார்.

பாரதத்தில்புதிய அரசாங்கம் பதவியேற்றிருப்பதைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள புதிய நிலைமையில், இருநாடுகளுக்கிடையே நல்லுறவு ஏற்படுத்த புதிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பாகிஸ்தானும் முயற்சிஎடுக்குமெனத் தாம் நம்புவதாகவும் திரு. சக்ளா குறிப்பிட்டார்.

டாஷ்கண்ட் பிரகடனத்தை அமுல் நடத்துவதில் இந்தியா முன்னைய நிலையையேபின்பற்றுவதாகவும், டாஷ்கண்ட் ஒப்பந்தம் அளித்தசுமுகமானநிலைமையைத் தொடர்ந்தும் வளர்க்க விரும்புவதாகவும் திரு. சக்ளா மேலும் கூறினர்.

### அணு ஆயுத பெருக்கத்தடை

அணு ஆயுத பெருக்கத்தடுப்பு ஒப்பந்தம் பற்றி அவர் குறிப்பிடுகையில், அணு ஆயுதம் பெருகுவதைத் தடுப்பதானது, பொதுப்படைக் குறைப்பின் ஓர் அம்சமாகவேவிளங்கவேண்டுமென்ற கொள்கையையே இந்தியா பின்பற்றுவதாகத் தெரிவித்தார். அத்துடன் இத்தகைய ஓர் ஒப்பந்தத்தின்கீழ் அணு ஆயுதம் உற்பத்திசெய்யும் நாடுகளும், செய்யாதநாடுகளும் சமமான கடமைப் பொறுட்புள்ளவையாக இருக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

# மா- சே -துங்குக்கு எதிராக சீனவில் ஆர்ப்பாட்டங்கள்

### இராணுவத்தினர் துப்பாக்கிச்சூடு

ஹொங்கொங், மார்ச் 15

கான்டனுக்கு அருகேயுள்ள தென்சீனநகரானபட்சானில் சீனத்தலைவர் மா-ஸே-துங்குக்கு எதிராகநடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின்போது, சீன ராணுவத்கினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததன் விளைவாக, ஏறத்தாழ 1,000 ஆர்ப்பாட்டக் காரர் கொல்லப்பட்டனர் அல்லது காயத்துக்குள்ளாகினர் என இங்கு அறிவிக்கப்பட்டது.

குவாண்டுங்கிலுள்ள பகுதிகளுக்கும் சென் வாரம் துரிதகதியில்அனுப்பி வைக்கப்பட்ட 300,000 துருப்புகளில் ஒரு பகுதியினர் பட்சானுக்கு வந்து சேர்ந்தபோது அதை எதிர்த்து தொழிலாளர்களும், விவசாயிகளும் ஆர்ப்பாட்டம் நடத்தியதாகவும், அச்சமயமே ராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் சீனவிலிருந்துவந்தஅகதிகள் தெரிவித்துள்ளதாக 'நியூ லைவ் ஈவினிங் போஸ்ட்' என்ற பத்திரிகை தெரிவித்தது.

## நம்பிக்கையில்லா தீர்மானம்

புதுச்சேரி, மார்ச் 15

புதுச்சேரி மந்திரிசபையின்மீது எதிர்க்கட்சி முன்னணி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைச் சபாநாயகர் அனுமதித்துள்ளார். இத்தீர்மானம் சட்டசபையின் அடுத்த கூட்டத்தில் விவாதத்துக்கு எடுக்கப்படும்.

## இந்தியாவுக்கு சுவீடன் உதவி

புதுடில்லி, மார்ச் 15

பாடப்புத்தகங்கள் பிரசுரிப்பதற்காக இந்தியாவுக்கு 8,009 தொன் கடதாசித்தாள் நன்கொடைசெய்ய சுவீடன் முன்வந்துள்ளது

## புதிய சபைகள் கூடின

புதுடில்லி, மார்ச் 15

கேரள, மைசூர் ராஜ்யங்களின் சட்டசபைகள் நேற்றுக்காலை முதன்முறையாகக்கூடின.

மைசூர் சட்டசபையில் 13 எதிர்க்கட்சிகள் சேர்ந்து, ஐக்கியமுன்னணியொன்றை உருவாக்கியுள்ளன. மைசூர் சட்டசபையில் எதிர்க்கட்சி ஐக்கியமுன்னணி அமைக்கப்படுவது இதுவே முதற்றடவையாகும்.

## இந்தியா பங்கு பற்றும்

புதுடில்லி, மார்ச் 15

அடுத்தமாதம் மொருக்கோ, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் நடைபெறவிருக்கும் சர்வதேச பொருட்காட்சிகளில் இந்தியா பங்கு பற்றும்.

## பம்பாயில் தங்கம் விலை குறைந்தது

பம்பாய், மார்ச் 15

பம்பாயில் தங்கத்தின் விலை குறைந்துள்ளது. மூல தங்கத்தின்விலை ரூபா 152 ல் இருந்து ரூபா 141க்கு வீழ்ந்துள்ளது.

## 'இவர்களுக்கு இரங்க முடியாது'

உடுவில், புதன்

''உணவு உற்பத்தியில் மக்களை ஊக்குவிக்கும் இக்காலத்தில் பயிர் அழிவு விஷயத்தில் எவருக்குமஎவ்விதஇரக்கமும் காட்டப்படமாட்டாது. எனவே பயிர்களை நாசம் செய்யும் கட்டாக்காலி மாடு, ஆடுகளை பிடித்து சோர்ட்டில் வழக்குத்தொடரப்படும்'' இணுவில் கிராம சேவகரால் கிராம மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள ஒரு பகிரங்க அறிவித்தலில் மேற்கண்டவரறு கூறப்பட்டுள்ளது.

# உணவு கொள்வனவு சீராக்க யோசனை

## மாவட்ட கலெக்டர்களிடம் அண்ணு தெரிவித்தார்

சென்னை, மார்ச் 15

தமிழ்நாட்டில் உணவுக் கொள்வனவு நிலைமையைச் சீராக்கவும், கஷ்டமற்றதாகவும்செய்ய தமது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென தமிழ்நாட்டு முதன்மந்திரி திரு. சி. என். அண்ணுதுரை, நேற்று நடைபெற்ற தமிழ்நாட்டு மாவட்ட கலெக்டர்கள் மகாநாட்டில் பேசும்போது தெரிவித்தார்.

அதிக நிலமுள்ள மிராசுதார்களிடமிருந்து தீவிரமான வசூலைக் கலெக்டர்கள் செய்யவேண்டுமென்றும், சென்ற ஆண்டைவிட இம்முறை கொள்வனவு குறைவாகஇருக்காது பார்த்துக்கொள்ளவேண்டுமென்றும் முதல்மந்திரி, கலெக்டர்களைக் கேட்டுக்கொண்டார்.

உணவு பதுக்கல், கள்ளக்கடத்தல் ஆகியவற்றைத் தடுக்க தமது அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும், ராஜ்யத்தில் உணவு கொள்வனவு மீண்டும் மாமூல்நிலைமைக்குத் திரும்புமெனத் தாம் நம்புவதாகவும் திரு. சி. என். அண்ணுதுரை மேலும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளில் கலெக்டர்களின் ஒத்துழைப்பை முதல்மந்திரி நாடினர்.

# தமிழ் நாட்டில் தமிழும் ஆங்கிலமுமே

## மூன்றும் மொழிக்கிடமில்லை

### என்கிருர் நெடுஞ்செழியன்

சென்னை, மார்ச் 15

தமிழ்நாட்டின் கல்வி, நிர்வாகம் ஆகியவற்றில் தமிழும், ஆங்கிலமும் மட்டும்இருந்தாற்போதுமெனத் தமிழ்நாட்டுக் கல்விமந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் நேற்று மதுரையில் பேசுகையில் கூறினர்.

தமிழ்நாட்டுநிர்வாகத்துக்கும் கல்வித்துறைக்கும் தமிழ், ஆங்கிலம் இருமொழிகளுமே போதுமானவை என அரசாங்கம் கருதுவதாகவும் ஆனல் மூன்றுவது மொழி ஒன்றைக் கற்க விரும்புபவர்களுக்கு வேண்டிய வசதிகளைக் கொடுக்க அரசாங்கம் தயங்காதென்றும் திரு. நெடுஞ்செழியன் மேலும் தெரிவித்தார்.

## அமெரிக்காமீது சீன குற்றச்சாட்டு

பீகிங், மார்ச் 15

ஆறு அமெரிக்க விமானங்கள் சீன நீர்ப்பரப்பின்மீது அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், மற்றுமொரு விமானம் சீனவானவெளியை ஊடுருவியதாகவும் சீன அமெரிக்காமீது குற்றம் சாட்டியுள்ளது.

## மகளைக்காணவில்லை

### பொலிஸில் புகார்

முல்லைத்தீவு, புதன்

தனது பதினன்கு வயது மகள் ராணிமலரைக் காணவில்லையென வற்றுப்பளையைச் சேர்ந்த தம்பிமுத்து சின்னையா முல்லைத் தீவுப் பொலிசில் புகார் செய்துள்ளார். பொலிஸார் தேடுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திகை ஆஸ்பத்திரிக்கு விரைவில் 'எக்ஸ்றே' படப்பிடிப்பு நிலையம்

## டாக்டர்கள், தாதிகள் விடுதியும் புதிதாக அமைக்கப்படும்

### சுகாதார அமைச்சர் உறுதி

—நமது நிருபர்—

'யாழ்ப்பாணம், வியாழன்

இலங்கையிலுள்ள சகல பகுதிகளிலுமுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளிலும் மிகவும் சிறப்பாகவும், எந்தவித மான நிர்வாகச் சீர் கேடுமின்றி நடைபெறும் ஆஸ்பத்திரிகளில் பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியும் முன்னணி வகிக்கின்றதென்பதை அமைச்சின் பதிவேட்டின் முடிவகைக் கொண்டு உங்களுக்கு அறியத்தருவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். மந்திகை ஆஸ்பத்திரி இப்பகுதியிலுள்ள பெரியார்களின் உதவியைக் கொண்டு குறுகிய காலத்தில் துரிதமான வளர்ச்சியை அடைந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. வெகுவிரைவில் 'எக்ஸ்றே' பிடிப்பு நிலையமொன்றை இங்கு அமைக்க நான் என்னுல் ஆன சகல முயற்சிகளையும் எடுப்பேன் என்று சொல்லமாட்டேன். நிச்சயமாக அமைத்துத் தருவேன் என உறுதிகூறுகின்றேன்.'

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன பேசுகையில் குறிப்பிட்டார்.

அமைச்சருடன் அவரது நிரந்தரக் காரியதரிசி திரு. ஸி. பாலசிங்கம், சுகாதார சேவை பிரதம அத்தியட்சகர் திரு. ஹெரட்குணரத்தின, வடமாகாணசுகாதார சேவை சுப்பிரின்டன்ட் திரு. இரத்தினசபாபதி, உடுப்பிட்டி, பருத்தித்துறை எம். பிக்களான திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், கே. துரைரத்தினம் ஆகியோர் உட்பட இன்னும் பல பிரமுகர்கள் சென்ருர்கள்.

ஆஸ்பத்திரி சந்தியிலிருந்து அமைச்சர் கோஷ்டியினர், பெண்களின் மேளவாத்தியங்களுடனும், பறைமேளக்கோஷ்டிகளுடனும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். வழிநெடுகிலும் பொதுமக்கள் அமைச்சருக்கு மலர் மாலைகள் அணிவித்தனர்.

ஆஸ்பத்திரி வாசலில் மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். சோமசுந்தரம் அமைச்சருக்கு மாலை அணிவித்துசந்தனமிட்டு வரவேற்ருர். ஆஸ்பத்திரி டாக்டர்களும், தாதிகளும் அமைச்சருக்கு மாலையிட்டு, மலர் செண்டுகளும் வழங்கி வரவேற்றனர்.

மேற்படி ஆஸ்பத்திரி வளவில் ஒன்றரை லட்சம் ரூபாய் செலவில் 24 படுக்கைகளுடன் நிறுவப்படவிருக்கும் புதிய பிரசவ விடுதிக்கான அத்திபாரக்கல்லையும், வடமராட்சி சௌக்கிய சபையினர் 40 ஆயிரம் ரூபாய் செலவில் 12 படுக்கைகளுடன் அமைத்துக் கொடுக்கவிருக்கும் புதிய வார்டுக்கான அடிக்கல்லையும் அமைச்சர் நாட்டிவைத்தார்.

ஆஸ்பத்திரியிலுள்ள ஒவ்வொரு வார்டுகளையும் அமைச்சர் தனது காரியதரிசியுடனும், எம். பியுடனும் சென்று பார்வையிட்டபோது வார்ட்டுகளிலுள்ள நோயாளர்களும், தாதிமார்களும், அமைச்சருக்கு மாலை அணிவித்து வரவேற்றனர். தாதிமார்கள் செய்துவரும் மரக்கறித் தோட்டத்தையும் பார்வையிட்ட அமைச்சர் நாட்டில் நிலவும் உப உணவுப் பொருள் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய இப்படியான மரக்கறித் தோட்டங்கள் மிகமிக அவசியமென்றும்இதனைச்செய்து வரும் மந்திகை ஆஸ்பத்திரி தாதிமாரைத் தான்பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

ஆஸ்பத்திரி முன்றலில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் உடுப்பிட்டி எம். பி. திரு. மு, சிவசிதம்பரம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அமைச்சர் ஜெயவர்த்தன தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

### 'நானே மீண்டும வருவேன்'

கடந்த வருடத்திலும் இங்கு வார்ட் ஒன்றை திறந்து வைப்பதற்காக நான் விஜயம் செய்திருந்தேன். அப்போதிருந்த நிலைமையிலும் பார்க்க இந்த ஆஸ்பத்திரி எவ்வளவோ சிறப்பாக இப்போது முன்னேறியுள்ளதை இன்று நான் காணக்கூடியதாகவிருக்கின்றது. இங்குள்ள பெரியவர்களினதும், உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தினதும், உங்கள் திறமை வாய்ந்த வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். சோமசுந்தரத்தினதும் ஊக்கத்தாலும் ஒத்துழைப்பாலும் இப்புதிய இரண்டு வார்டுகளும் இவ்வருடத்திலேயே துரிதமாகக் கட்டி முடிக்கப்பட்டால் நானே அதனைத் திறந்துவைக்கவும் இங்கு நிச்சயமாக வருவேன்.

இந்த ஆஸ்பத்திரிக்கு டாக்டர்கள் விடுதியையும் தாதிகள் விடுதியையும் அமைத்துத் தர அமைச்சில் நான் நடவடிக்கை எடுப்பேன். தற்போது நாட்டில் நிலவும் டாக்டர்கள் பற்ருக்குறையையும் நிவர்த்தி செய்யவும் நான் நடவடிக்கை எடுத்து வருகின்றேன். இங்கு கடமையாற்றிய சுமார் 100 டாக்டர்கள் விசேஷ பயிற்சி பெறுவதற்காக தற்போது வெளிநாடு சென்றுள்ளார்கள். எதிர்வரும் இரண்டு வருடகாலத்துள் டாக்டர்கள் பற்ருக்குறை ஓரளவுக்கு குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கான முயற்சிகளையும் நாங்கள் துரிதமாக எடுத்து வருகின்ருேம்.

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், பட்டினசபைத் தலைவர் ஆகியோரும் பேசினர். அமைச்சருக்கு வடமராட்சி சௌக்கிய சபையினரின் சார்பில் மகஜரொன்றும் சமர்ப்பிக்கப்பட்டது. திரு. திரு. என். செல்லப்பா நன்றி தெரிவித்துப் பேசினுர்.

### காங்கேசன்துறையில்

காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் மனநோயாளர் வார்ட்டைத் திறந்துவைப்பதற்காக சுகாதாரஅமைச்சர் அங்கு விஜயம்செய்தபோது தமிழரசுத் தலைவரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், செனட்டர் நடராஜா, காங்கேசன்துறை ஆஸ்பத்திரி வைத்திய அதிகாரி டாக்டர் மாணிக்கம் ஆகியோர் அவரை மலர்மாலை அணிவித்து வரவேற்றனர்.

வார்ட்டை திறந்துவைத்துப்பேசிய அமைச்சர் தாம் ஆஸ்பத்திரியின் அபிவிருத்திக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக உறுதி தெரிவித்தார்.

### வல்வெட்டித்துறையில்

வல்வெட்டித்துறை, புதன்

வல்வெட்டித் துறைக்கு அமைச்சர் விஜயம்செய்தபோது அமைச்சருக்கு வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தினரும் வேம்படி வாசிகசாலை அங்கத்தினரும் வரவேற்பளித்தனர். பருத்தித்துறை எம்.பி. திரு. கே. துரைரத்தினம் சனசமூக நிலைய வாசலில் வைத்து அமைச்சரை மாலை அணிவித்து வரவேற்ருர். இதனைத் தொடர்ந்து நிலையத் தலைவர். எஸ்.ஞானமூர்த்தி, பட்டினசபைத்தலைவர் திரு. வி. இரத்தினவேலு ஆகியோரும் அமைச்சருக்கு மலர்மாலை அணிவித்தனர்.

பின்னர் அமைச்சர் திறந்தகாரில் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிவரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.



ஆஸ்பத்திரி வாசலில் டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன் மாலை அணிவித்து அமைச்சரை வரவேற்ருர்.

அமைச்சர் வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரி நிர்வாகக்கட்டிடத்துக்கான அத்திபாரக்கல்லை நாட்டிவைத்தார். அப்போது ஸ்ரீ பரமேஸ்வரக்குருக்கள் சைவ முறைப்படி பூசைசெய்து அமைச்சருக்கு திருநீறு, சந்தனம் வழங்கினுர்.

பின்னர் பட்டினசபைத் தலைவர் திரு. இரத்தினவடிவேலுதலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தன பேசுகையில், வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரிக்கு விரைவில் 'எக்ஸ்ரே' கருவிகள் இணைக்க ஏற்பாடுசெய்யப்போவதாகத் தெரிவித்தார்.

தேசியஅரசாங்கம் எல்லோருக்கும் சமநீதிவழங்கவே விரும்புகிறது என்றும் அவர் எடுத்துக் கூறினுர்.

பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பேசுகையில் தேசிய ஐக்கியத்தை உருவாக்கிய தேசிய அரசாங்கத்தின் அமைச்சரை வரவேற்பதில் நாம் பெருமையும், மகிழ்ச்சியும் கொள்வதாகத் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கென ரு, 2 லட்சம் ஒதுக்கப்பட்டதாகவும் இதற்கெல்லாம் அரசாங்கத்துக்கும் அமைச்சருக்கும் தாம் நன்றி கூறுவதாகவும் திரு. துரைரத்தினம் குறிப்பிட்டார்.

நகரசுத்தித் தொழிலாளர் வசிப்பிடத்தை வேறிடத்துக்கு மாற்றிவைத்ததற்காகப் பட்டினசபைத் தலைவருக்கும் அவர் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

திரு. சுதேந்திரன் நன்றி கூறினுர்,

ஆஸ்பத்திரியின் தேவைகள் பற்றிய மகஜரொன்று வல்வெட்டித்துறை மக்களால் அமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

### இணுவிலில்

கோண்டாவில், புதன்

இணுவில் மக்கிலியட் ஆஸ்பத்திரிக்கு சுகாதார அமைச்சர் விஜயஞ்செய்தபோது அவரை உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம், கிராமசபைத்தலைவர், ஆஸ்பத்திரி முகாமையாளர் ஆகியோர் ஆஸ்பத்திரி வாசலில் பூரணகும்பம் வைத்து மாலையிட்டு வரவேற்றனர். அதைத் தொடர்ந்து அமைச்சர்ஆஸ்பத்திரி வார்ட்டுகளைச் சுற்றிப் பார்வையிட்டு அங்குள்ள குறைபாடுகளை நேரில் அறிந்துகொண்டார்.

---

### பஸ் சேவைசீர்கேடு

புன்னுலைக்கட்டுவன், புதன்

கடந்த சில நாட்களாக மானிப்பாய்-சாவகச்சேரி பஸ் சேவை சீர்கேடாக நடைபெறுவதால் பலஆசிரியர், மாணவர், உத்தியோகத்தர்கள்மிகவும்சிரமத்துக்குள்ளாவதாய்த் தெரிகிறது.


## குதிரை மார்க் வாளிகள்



### குதிரை மார்க் கல்வனைஸ்ட் வாளிகளை வாங்கி உபயோகிக்கிறீர்களா?

### இன்றே வாங்குங்கள்

குதிரை மார்க் வாளிகள் தரத்தில் உயர்ந்த இரும்புத் தகடுகளினுல் செய்யப்பட்டவை. எங்கள் தொழிற்சாலையில் மட்டும் கல்வெக்ஸ் முறைப்படி விசேஷமாகத் தயாரிக்கப்படுவன. உங்களுக்கு வேண்டிய எல்லாவித அளவுகளிலும்கிடைக்கும்

குதிரை மார்க் • HORSE BRAND •

தயாரிப்பாளர்கள்:-

தலைமைக்காரியாலயம்:- எல்பிஹெம்ஹவுஸ் கொழும்பு.

தொழிற்சாலை:- எல்பிஹெம் ஹவுஸ் மாவிட்டபுரம்.

வடமாகாண விநியோகஸ்தர்கள்:- தனலக்ஷ்மி ஸ்ரோர்ஸ் தெல்லிப்பழை.

கையிருப்பாளர்கள்:-

1. மஸ்கன்ஸ் லிமிட்டெட், கொழும்பு - 12.
2. என். வைத்திலிங்கம் அன் கோ, 3-ம் குறுக்குத்தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

**பெண்கள்**
**தொழிற்பயிற்சி நிலையம்**
**சுண்டிக்குளி**

சுருக்கெழுத்து, தட்டெழுத்து, கணக்குப்பதிவு, ஆங்கிலம், சிங்களம்.

ஒருமாதம் பாடம் ஒன்றுக்கு ரூபா 6/- கீழ்க்காணும் விலாசத்திற்கு மனுச் செய்க.

**கௌரவ செயலாளர்,**
12, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
2482

---

கச்சாய் கிராமசபை
**கேள்வி விளம்பரம்**

அல்லாரை தெற்கு வீதி வேலைக்கான கேள்விகள் 29-3-67 புதன் கிழமை நண்பகல் 12 மணிவரையும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

28-3-67 செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணி வரையும், கேள்விப்பத்திரப்பணமாகிய ரூபாய் 10/-ம் கட்டுப் பணமாகிய ரூபாய் 50/-ம் கட்டி கேள்விப் பத்திரங்களை இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரத்திற்குரிய ரூபாய் 10/- திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது.

மேற்படி வேலைக்கெனக் கொடுக்கப்படும் பத்திரங்களிலேயே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

மேற்படி வேலையைப் பற்றிய மேலதிக விபரங்களை வேலை நேரத்தில் மேற்படி சபை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அ. த. சிதம்பரப்பிள்ளை,**
[ஒப்பம்]
தலைவர்,
கிராமசபை, கச்சாய்.
கிராமசபை அலுவலகம்,
கச்சாய்,
கொடிகாமம்.
14-3-67. 2483

---

**கேள்விப் பத்திர அறிவித்தல்**

செம்பியன்பற்று கிராம சபைத்தலைவரால் 27-3-67ம் திகதி காலை 10 மணிவரை வடலியடி றேட்டு வேலைக்கான கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விகள் 23-3-67-ம் திகதி காலை 9 மணிமுதல் பி. ப. 2 மணிவரையும் ரூபா 25-00 கேள்விப் பிணையாகவும் ரூபா 5-00 கேள்விப்பத்திரக் கிரயமாகவும் செலுத்துவதன் பேரில் கொடுக்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களிலேயே அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரக் கிரயம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

மற்றும் விபரங்களை சபையின் அலுவலகத்திலும் யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

**ஐ. ஆ. ஐயம்பிள்ளை,**
கி. ச. தலைவர்.
கிராமசபை அலுவலகம்,
செம்பியன்பற்று,
54-3-67. 2485

---

**உங்கள் எதிர்காலம்**

பலர் பயனடைந்து புகழும் இலக்க கக்கிஷம் எனும் முற்றிலும் புதுமையான சோதிடமுறைப்படி, உங்கள் எதிர்காலப் பலனறிய விரும்புகிறீர்களா? இன்றே, பிறந்தமுழுத்திகதி, வழக்கமான கையெழுத்துப் பெயர், கடிதமெழுதும் நேரம் முதலிய விபரத்துடன் ரூபா 10-00 போஸ்டல் ஓடர் அனுப்பி, பொதுப் பலன், ஒருவருட விரிவான பலன், மூன்று கேள்விக்குரிய முற்றிலும் சரியான விடையையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

விலாசம்:

மஹாமந்திர உபாஸி
வி. வே. செல்வராசன்,
விநாயக முதலியார் தெரு,
பருத்தித்துறை.

2486

---

**ராஜா RAJAH**
**யாழ்ப்பாணம் JAFFNA**
தினசரி 2-30, 6-30, 9-45
3போயாதினங்களில் 4காட்சிகள்
ஜெமினி—சாவித்திரி
நடித்த
**புதிய பாதை**

---

**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
K.R.ராமசாமி - சாவித்திரி
நடித்த
**செல்லப்பிள்ளை**

---

## திருமணம்

மணமகன்: **ந. கார்த்திகேசு.** மணமகள்: **சி. அன்னப்பிள்ளை.** திருமணம்: 18-3-67 மாலை 5 மணிக்கு நல்லூர் சிவன் கோவிலில் நடைபெறும். சுற்றத்தவர்களும் நண்பர்களும் மேற்படி விவாகத்திற்கு வருகை தரும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம். தா. சின்னையா தம்பதிகள், சங்கத்தானை; கா. நடராசா தம்பதிகள், கொக்குவில்.
1629

மணமகன்: **தருமலிங்கம்** [மலேசியா]. மணமகள்: **ந. தனவதி** [கொக்குவில்]. திருமணம் 18-3-67 காலை 10 மணிக்கு மணமகள் இல்லத்தில் நடைபெறும். சுற்றத்தவர்களும் நண்பர்களும் மேற்படி விவாகத்திற்கு வருகைதரும் வண்ணம் அன்புடன் அழைக்கிறோம். க. தியாகராசா தம்பதிகள், மலேசியா; கா. நடராசா தம்பதிகள், கொக்குவில்.
1627

---

# வானொலி நிகழ்ச்சிகள்

**வியாழன் 16 - 3 - 67**

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் & 61 மீற்றர்** காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 தேர்ந்த இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம். 1-00 கதம்பஇசை.

**344 மீற்றர் & 61 மீற்றர்** மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசைக் கச்சேரி — எஸ். பரம்தில்லைராசா.

---

**"ஐக்கியத்துக்கு விளையாட்டு"**

உடுவில், புதன்

"நாம் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன்மற்றவரிடம் பழகுவதற்கும், நாட்டில் ஒற்றுமையும் தேசியஐக்கியமும் வளரவும் கிராமங்கள்தோறும் இவ்வகையான விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்பட வேண்டியது அவசியம்."

உடுவில் கிராம சபையின் ஆதரவில் இணுவில் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள கரபந்தாட்டத் திடலைத் திறந்து வைத்துப் பேசுகையில் சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேர்ஸி விஜய சூரியா மேற்கண்டவாறு கூறினார்.

உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. ச. முத்துலிங்கம் தலைமை வகித்தார்.

---

**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
Daily at 4-45, 7-00, 9-45
Aean Seberg
Sean Garrison
in
MOMENT TO MOMENT
[Technicolor]

---

**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
KIRK DOUGLAS
in
SPARTACUS

---

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

முட்டைகள்

தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேஷ கழிவு உண்டு. அருணா ஏஜென்ஸீஸ்; அளவெட்டி 1607

கார்

EY 4000 இலக்க நல்ல நிலைமையிலுள்ள ஆஸ்டின் சோமசெற் கார் விற்பனைக்குண்டு. விலை மலிவு. அலக்ஸாண்டர், வில்லியம் மேதர் மே/பா, பீச்றோட், பாஷையூர் என்ற விலாசத்தில் தொடர்புகொள்ளவும்.
1626

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனாம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணானந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## கல்வி

வகுப்புகள்

G. C. E. சாதாரணம், உயர்தரம் வரையிலும் மற்றும் தையல், மனையியல், சங்கீதம், வர்த்தகம் [சுருக்கெழுத்து, தட்டெழுத்து, புத்தக வைப்புமுறை] முதலியவற்றில் வகுப்புகள் நடைபெறுகின்றன. முக்கியமாக விஞ்ஞானம், கணிதம் ஆங்கிலம் முதலியவற்றில் விசேஷபயிற்சி அளிப்பதற்கு தகுதியும் அனுபவமுமுள்ள ஆசிரியர்களும், ஆசிரியைகளும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பள்ளி மாணவர்களுக்கு 4 மணியிலிருந்தும் ஏனையோருக்கு காலை 9 மணியிலிருந்தும் வகுப்புகள்நடைபெறுகின்றன். விண்ணப்பிக்கவும். கணேசன் கல்வி நிலையம், அளவெட்டி.
1630

---

நாரந்தனை. புதன்

வேலணை பெரிய தபால் கந்தோரின் நிர்வாகத்தின் கீழுள்ள சோழாவத்தை உப தபால்கந்தோர், தீவுப் பகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. நவரத்தினத்தின் முயற்சியால் "சி" தரத்தில் இருந்து "பி" தரத்திற்கு இம்மாதம் முதலாம் திகதியன்று தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

---

கந்தபுராணம்




தக்ஷ காண்டம்

ஆக்கியோன்:
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்**
விலை ரூபா 22-00
கிடைக்கும் இடங்கள்:
**ஸ்ரீ லங்கா புத்தகசாலை — யாழ்ப்பாணம்.**
**தனலக்ஷ்மி புத்தகசாலை — சுன்னாகம்.**

---

**2வது வெற்றி வாரம்!**

| | | |
|---|---|---|
| **கிங்ஸ்லி** | **பிளாஸா** | **நவா** |
| கொழும்பு | வெள்ளவத்தை | கொம்பனித்தெரு |

**விஜயா**
மட்டக்களப்பு
மற்றும் நாலு திரைகளில்

**எம். ஜி. ஆர். — சரோஜாதேவி**
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடிக்கும்

# தாயின் மடியில்

**கடைசி வாரம்**
**வெலிங்டன்**
யாழ்ப்பாணம்

**ஜெமினி கணேசன் — சாவித்திரி**
அசோகன், தங்கவேலு, மணிமாலா
முதலியோர் நடித்த

# வல்லவனுக்கு வல்லவன்

---

ராதா மணி மார்க்

# சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச்செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபால இடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல் தைலம்.

**எங்கும் கிடைக்கும்**

தயாரிப்பாளர்கள்:-
**ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்**
**(Radha Perfumery & Radha Products)**

ஏகவிநியோகஸ்தர்கள்:-

# எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

[மருந்து, மருந்துச்சரக்கு, வாசனாதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.]

53, கே.கே.எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறி அரசோச்ச அனைவரும் உழைப்போம்

## தமிழ்நாடு மக்களுக்கு முதன் மந்திரி அழைப்பு

### தென்மாநில ஒத்துழைப்பின் அவசியத்தையும் வலியுறுத்துகிறார்



சென்னை மார்ச் 15

தமிழ்நாடு முதன் மந்திரி திரு. ஸி என் அண்ணுதுரை இன்று மாலை நாட்டு மக்களுக்கு விடுத்த வானொலிச் செய்தியில், உணவு உற்பத்தியில் விருத்திபெற, நாட்டில் திறமையான ஆட்சி நிலவ நாடு செழிப்படைய மக்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு தேவை என்று கேட்டுக்கொண்டார் நாட்டை நாசமாக்கும் 'நடமாடும் நோய்'களிலிருந்தும் சமூக விரோதிகளிடமிருந்தும் நம்மைப் பாதுகாக்க 'ஆட்சி எமதே' என்ற நல்லெண்ணம் மக்களிடையே ஏற்பட்டு உயரிய தூயசேவையாற்ற சகல மக்களும் முன் வர வேண்டுமென்றும் தமது செய்தியில் திரு ஸி என் அண்ணுதுரை அழைப்பு விடுத்துள்ளார்.

'வயலிலே நெல் விளைச்சல் பெருகவேண்டும். தொழிற்சாலையிலே உற்பத்திப் பெருக்கம் விரைய வேண்டும். இந்த நாட்டு உழைப்பாளிகள் எல்லோரும் 'நாமே ஆட்சி நடத்துபவர்கள்' என்று எண்ணும் நிலை வரவேண்டும். இல்லாமை, போதாமை என்ற வார்த்தைகள் இல்லாமலே எல்லோரும் இன்புற்றிருக்கும் நிலை ஏற்படட்டும். இந்நிலை வருவதற்கு, எமது கஷ்டநிலை மாறுவதற்கு ஊழல்கள் ஒழியவேண்டும். ஊதாரித்தனம் மறைய வேண்டும். அறவிலை, பதுக்கல் ஒழியவேண்டும்' என்று தமிழ்நாடு முதன் மந்திரி திரு. ஸி. என். அண்ணுதுரை நாட்டு மக்களைக் கேட்டுக்கொண்டார்.

**'நெஞ்சு நெகிழ்கிறது'**

தமிழ்நாடு முதன் மந்திரி திரு. ஸி. என். அண்ணுதுரை தமது வானொலிச் செய்தியில்மேலும் தெரிவித்திருப்பதாவது-

'பல ஆண்டுகளாக எமது தோள்களுக்குப் பக்கபலமாகவிருந்து எமக்கு வலிமையும் புத்துணர்வையும் ஊட்டிய இந்நாட்டு 'மன்னர்கள்' இப்பொழுது நாடாளும் அந்தப் புனிதப் பொறுப்பை என்மீது சுமத்தியிருக்கின்றனர். கடமையே இலட்சியமாகக் கொண்டிருக்கும் என்னைச் சுற்றியெல்லாம் கைகொடுக் கரங்கள்... அன்புமொழி பேசும் மக்கள்..., தயக்கம் வேண்டாம், வேண்டாம் என்று ஆறுதல் கூறும் வார்த்தைகள்... ஏராளம் ஏராளம். தேசப்பற்று மிகுந்த தமிழக மக்களின் உறுதிமொழிகளெல்லாம் எனது செவிக்குச் செவ்வையாக விழுகின்றன.

**'தமிழ்நாடு'**

எனது பொறுப்பை நான் உணர்கின்றேன். தமிழ்நாட்டு மக்களின் துயர் துடைக்க ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது பற்றி அகமகிழ்கின்றேன்! காவிரி, பாலாறு பாயும் தமிழ்நாட்டில், உற்பத்திப் பெருக்கத்தில் ஆயிரமாயிரம் தொழிலாளர்கள் ஈடுபடும் தமிழ்நாட்டில், அமுதாம் அதன் இனிமை என்று பாவலர் கொண்டாடும் தமிழ் பாயும் தமிழ்நாட்டில், பாருக்குள்ளே நல்லதொரு நாடு என்று பாரதி கொண்டாடிய தமிழ்நாட்டில்... நான் சேவையாற்றக் கொடுத்துவைத்தது நான் செய்த பெரும் பாக்கியமே.

**'உங்களால் நாம்'**

இன்று எம்மைச் சுற்றிப் பல பிரச்னைகள் உள. இவற்றை விரைவாகவே தீர்த்து வைக்க எமக்கு உங்களின் உறுதியான ஒத்துழைப்பு, தோழமை, ஆதரவு தேவை. கடமையைச் செய்ய நாம் எப்பொழுதுமே தயார். நாங்கள் இன்றுள்ள நிலைமைக்கு, நீங்களே—இந்த நாட்டு 'மன்னர்கள்' காரணம். உங்களுக்காக நாமல்ல உங்களாலேதான் நாம்.

நாடு சீரடைய, நாட்டு மக்கள் பயனடைய திறமையான ஆட்சிநிலவவேண்டும். இதற்கு நாம் மட்டும் சீராக பணியாற்றினல் போதாது. அரசநெறி அரசோச்ச உங்களின் தேவைகளை முதலில் பூர்த்திசெய்யவேண்டும். இந்நாட்டு உழைப்பாளி வர்க்கம், 'இந்நாடு எமது நாடே' என்று பறைசாற்றவேண்டும். உண்மையான சேவையும் நாட்டுப்பற்றும் மிகுந்த இந்நாட்டு 'மன்னர்கள்' இப்பணியை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

**'ஆசைகள் பலப்பல'**

ஆசையால் உந்தப்பட்டுச் சிறு பணியேனும் செய்ய வேண்டுமென்ற தீராத ஆசை—ஆட்சியைப் பொறுப்பேற்றதும் பிறந்தது. ஆசைகள் பலப்பல. அவை தீரவேண்டுமென்ற நோக்கங்கள் பலப்பல.

உணவு உற்பத்தி பெருக வேண்டும். இல்லாமை, போதாமை இல்லாமலே போகவேண்டும். எல்லோரும் இன்புற்றிருக்கவேண்டும். இதற்கு எம்மிடையே பிளவுகள் அகலவேண்டும். ஒத்துழைப்பு மலரவேண்டும். கூட்டு முயற்சி பிறக்க வேண்டும். தூயதொண்டாற்ற வாரீர், வாரீர் என்று இந்நாட்டு 'மன்னர்களை' அழைக்கின்றேன்.

செயலில் ஈடுபட முன்னர் சிந்தனை பிறக்கவேண்டும். அந்தச் சிந்திப்பையே இப்பொழுது செய்துவருகின்ரேம். ஊழல்கள், ஊதாரித்தனத்தைப் போக்க ஆலோசித்துவருகின்ரேம்.

**'அணைத்தல்'**

**'பிணைத்தல்'**

தமிழ்நாட்டில் புதிய அரசு பிறந்திருக்கிறது. அரசியலிலும் புதியபிரச்னைகள் உதிக்கலாம். சிக்கல், குழப்பம் ஏற்படலாம். இங்கு கூட்டாட்சியைக்கண்டு [illegible]கைப்பு எரிச்சல், கசப்புக் கொள்பவர்களுமுண்டு. நமக்குத் தேவை மிகச் சிறந்த பண்பு மிக்க ஆட்சியே. ஒருவர் மனதை மற்றவர் புரியும் பண்பு பிறக்கவேண்டும். இன்சொல், நட்பு உங்களிடமிருந்து எமக்கு வரவேண்டும். மத்திய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் மிகச் சிறப்பான கூட்டு ஒத்துழைப்பு இருக்கவேண்டும். இவைகளிடையே அணைத்தல், பிணைத்தல், கட்டுண்டு கிடத்தல் தேவை. தென் மாநிலங்களின் ஒத்துழைப்பும் மிகவும்அவசியம். எனது நண்பரும் கேரள முதன் மந்திரியுமான நம்பூதிரிபாத் இக்கருத்தையே கொண்டிருக்கிறார். காங்கிரஸல்லாத மாநிலங்களின் மகாநாட்டைக்கூட்ட வேண்டுமென்று வங்காள முதல்வர் முகர்ஜி கோருகிறார். இதனை விரும்புகின்றேன். வரவேற்கின்றேன். மாநிலங்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய இவை புதிய பொலிவு பெற வேண்டும். உள்ளத்து யோசனைகள் எல்லாம் இதனைத் தான் இடித்து இடித்து கூறுகின்றன.

**'இலட்சியம் தூய்மையானது'**

இலட்சியம் தூய்மையானது. எமது சக்தியினும் மிகப்பெரியது எல்லோருடைய திறமையையும் நம்பித்தான் இப்பணியில் இறங்[illegible] யுள்ளோம் - [illegible] இலட்சி[illegible]யங்களை நிவைவேற்ற.

**'துரோகிகள்'**

தரிசு நிலங்கள் விளை நிலமாகட்டும். இதற்கு வியர்வை சிந்துவோம். எமது உற்பத்திக்குமுட்டுக்கட்டையாக விருப்பவர்கள் இந்த நாட்டு துரோகிகள்—சமூக பகைவர்கள். ஊழலிலும் பதுக்கலிலும் தங்கள் நேரத்தை பயன்படுத்தி நாட்டை நாசமாக்கும் ''நடமாடும் நோய்'' களிலிருந்து எமது நாட்டைக் காப்பாற்ற வேண்டும். சமுகவிரோதிகளை களைந்தெறிவோம். சமுதாய நலனுக்கு உயிர்ப் பணி அளிப்போம். சேவை சேவை என்பதே எமது தேவை தேவை என்றஉறுதி கொள்வோம். நாடு செழிப்படைய நம்துயர் துடைக்க இந்த நாட்டு மன்னர்களை- எமக்கு ஆட்சிப் பொறுப்பை அளித்த உழைப்பாளி வர்க்கத்தை- உயர்ந்த நோக்கம் படைத்த உள்ளங்களைவாரீர் வாரீர் என்று அழைக்கின்றேன். எனது அழைப்பு உங்கள் செவிகளில் ஒலிக்கும்-புதிய சேவை பிறக்கும் என்பது எனது திடமான நம்பிக்கை.''

## தனிப்பட்ட பாடசாலைகளின் முன்னாள் ஆசிரியர்கள்

### மீண்டும் வேலைகோரியுள்ளனர்

யாழ்ப்பாணம், வியா.

பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்குமுன் தனிப்பட்ட பாடசாலைகளில் ஆசிரியர்களாக கடமையாற்றி முகாமையாளர்களால் பதவிநீக்கம் செய்யப்பட்டவர்கள், கல்வி மந்திரி திரு. இரியகொலையிடம் ஒரு மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மூலம், கல்வி மந்திரிக்கு அவர்கள் சமர்ப்பித்துள்ள மகஜரில், பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்குமுன் தாங்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டதாகவும் இவ் விஷயமாக பரிசீலனை செய்யும் படியும் கேட்டுள்ளனர்.

மாஜி ஆசிரியர்களை விண்ணப்பிக்கும்படி கல்வி வித்தியாதிபதி கேட்டுக் கொண்டதற்கிணங்க 1961-ம் ஆண்டு தாங்கள் ஆசிரியர் வேலைக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், கடந்த 5 வருடகாலமாக அரசாங்க பாடசாலைகளில் தங்களை நியமிக்க வில்லையென்றும் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக கல்வி மந்திரியை சந்தித்து மீண்டும் நியமனம் பெற்றுத் தருவதாக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், ஆசிரியர் கோஷ்டியிடம் தெரிவித்துள்ளார் என்று அறியப்படுகின்றது.

## ஜவுளி கூப்பன் புள்ளிகளில் மாற்றம்

கொழும்பு, புதன்

23-வது தொடர் கூப்பன் புத்தகத்தின் 25-ம் இலக்க புள்ளியும், ஜவுளி அடையாள அட்டை 9-வது புள்ளியும் ஏப்ரல் மாதம் 1-ம் திகதியுடன் ஜவுளி கொள்வனவுக்கு செல்லுபடியாக மாட்டா. அவைகளுக்கு பதில் 23-வது தொடர் அரிசிக் கூப்பனில் 97-வது புள்ளியும் ஜவுளி அடையாள அட்டையில் 12-வது புள்ளியும் அன்றைய தினத்திலிருந்து ஜவுளி கொள்வனவுக்கு செல்லுபடியாகும்.

## ஐயாறன்

[2-பக்கத் தொடர்ச்சி]

திருவடிகளை நாள் தொறும் தேடுவேன். அவனை உந்திக்கு மேல் நால்விரல் அளவில் உள்ள இருதயத்தில் நினைப்பேன். வெளியில் செனமூல வலிய கையால்பிடித்துமகிழ்ந்து உள்ளே சேர்ப்பேன். அவனுக்கு ஒப்புடையன ஆகும்படி கூத்துகளை ஆடுவேன்.]

## சிறுபான்மைத். . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி

தினம் நெசவுநிலையமொன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் சுகாதார அமைச்சர் திரு. எம். டி. எச். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

விழா ஆரம்பமாவற்கு முன்னர்அமைச்சரும், உடுப்பிட்டி எம் பி திரு. சிவசிதம்பரமும், அமைச்சரின் நிரந்தரக்காரியதரிசி திரு. ஸி. பாலசிங்கமும் அலங்கரிக்கப்பட்ட 'ட்ராக்டர்' வண்டியில் மேளவாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

வழிநெடுகிலும் மக்கள் பூரணகும்பங்கள் வைத்து அமைச்சருக்கு மலர்மாலையிட்டுக் கௌரவித்தனர்.

திரு மு. சிவசிதம்பரம் எம். பி. தலைமையில் நடைபெற்ற திறப்புவிழாவில் அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், செனட்சபையில் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச்சேர்ந்த ஒருவர் இருந்தாலே அவர்களது பிரச்னைகளையும், குறைகளையும் அரசாங்கம் நேரடியாகத் தெரிந்து கொள்ளமுடியுமென்றும், அதனைச் சுமுகமாகத் தீர்க்கவே தாம் இதனை முயற்சிப்பதாவும் தெரிவித்ததோடு, நெசவுதொழிலில் தற்போது மக்கள் அதிக அக்கறை காட்டிவருவது குறித்து தாம்மகிழ்ச்சியடைவதாகவும், யாழ்ப்பாண மக்கள் எவ்வளவோ பிரயாசையும், சுறுசுறுப்புமுடையவர்கள் என்பதைத்தான் தனது யாழ்ப்பாண விஜயங்களில் நன்கு கவனித்துள்ளதாவும், ஒவ்வொருவரும் தத்தம் வீட்டிலேயே உப உணவுப் பொருட்களைப் பயிரிட்டால் நாட்டில் நிலவும் உபஉணவுத் தட்டுப்பாட்டை ஓரளவுக்கு நிவர்த்திசெய்யலாமெனவும் தெரிவித்தார்.

அமைச்சருக்கு 'கருப்பணி', கைப்பிரம்பு, கைத்தறிச்சால்வை ஆகியன அன்பளிக்கப்பட்டன. [ந. நி]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org